## <u>சுருக்கம்</u>

சென்னை மருத்துவ கல்லூரி வளாகத்தில் இயங்கி வரும் இந்தியன் வங்கி ஏ.டி.எம் மையம் இயங்குவதற்கு 01.11.2012 முதல் 31.10.2015 வரையிலான காலத்திற்கு மாத வாடகையாக ரூ.16.500/– என நிர்ணயம் செய்து குத்தகை நீட்டிப்பு வழங்கி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### <u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எச்1) துறை</u>

அரசாணை(ப) எண். 490

நாள்:15.04.2015<br>
திருவள்ளுவர் ஆண்டு 2046<br>
மன்மத சித்திரை 2ஆம் நாள்.

படிக்கவும்:–

1. அரசு ஆணை (நிலை) எண்.603, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.22.5.2009.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கடித எண்.த.வ.அ.(ஆ)/29518/2009, நாள்.20.03.2013.
3. மருத்துவக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.78998/திவ/2/2013, நாள்.27.01.2014.

-------

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை மருத்துவக் கல்லூரி வளாகத்தில், பொதுப்பணித் துறை நிர்ணயிக்கும் வாடகையைச் செலுத்தி ஏடிஎம் மையத்தினை திறந்து செயல்பட இந்தியன் வங்கிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்சொன்ன ஏடிஎம் மையம் செயல்பட மாத வாடகையாக ரூ.6000/– நிர்ணயிக்கப்பட்டதாகவும், அதன் குத்தகைக் காலம் 01.11.2009 முதல் 31.10.2012 வரையாகும் என்றும், குத்தகை காலம் 31.10.2012 உடன் முடிவடைந்த நிலையில் மேற்படி ஏடிஎம் மையத்திற்கு குத்தகை நீட்டிப்பு மற்றும் 10–0''x10–0''=100 ச.அ பரப்பளவுள்ள இடத்திற்கு 01.11.2012 முதல் 31.10.2015 வரையிலான காலத்திற்கு மாதவாடகையாக ரூ.16,500/–ஐ நிர்ணயம் செய்து வழங்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை அவர்கள் அரசினைக் கோரியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இந்தியன் வங்கி ஏ.டி.எம். மையம் நடத்திட மாத வாடகையாக ரூ.6000/– என நிர்ணயம் செய்து 01.11.2009 முதல் 31.10.2012 வரையிலான மூன்று வருட காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டு குத்தகை தொகை வசூலிக்கப்பட்டு வந்தது என்றும், மேற்குறிப்பிட்டுள்ள ஏ.டி.எம். மையம் குத்தகை காலம் 31.10.2012 வரை மூன்று ஆண்டுகள் முடிவுற்றதை தொடர்ந்து மேலும் மூன்று வருடங்களுக்கு அதாவது 01.11.2012 முதல் 31.10.2015 வரையிலான காலத்திற்கு குத்தகை நீட்டிப்பு கேட்டு இந்தியன் வங்கி கிளை

மேலாளர் விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும், மேலும் அதற்கான அனுமதி குறித்து தடையேதுமில்லை என சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்கள் கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார் என்றும், சென்னை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இயங்கி வரும் இந்தியன் வங்கி ஏ.டி.எம். மையம் தொடர்ந்து இயங்கவும், மூன்று வருடங்களுக்கு அதாவது **01.11.2012** முதல் **31.10.2015** வரையிலான காலத்திற்கு **10–0"x10–0"=100** ச.அ பரப்பளவுள்ள இடத்திற்கு மாத வாடகையாக ரூ.**16,500/–**ஐ நிர்ணயம் செய்து குத்தகை நீட்டிப்பு வழங்க முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காணும் நிலையில், மருத்துவக் கல்லூரி இயக்குநர் மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித் துறை, சென்னை ஆகியோரின் கருத்துருவை பரிசீலித்து, அதனை ஏற்று, சென்னை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 10–0"x10–0"=100 ச.அ பரப்பளவுள்ள இடத்தில் இயங்கிவரும் இந்தியன் வங்கி ஏடிஎம் மையத்திற்கு **01.11.2012** முதல் **31.10.2015** வரையிலான காலத்திற்கு மாத வாடகையாக ரூ.**16,500/–**ஐ (ரூபாய் பதினாறாயிரத்து ஐநூறு மட்டும்) நிர்ணயம் செய்தும் குத்தகை நீட்டிப்பு செய்து அரசு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்**
**அரசு செயலாளர்**

<u>பெறுநர்</u>
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10
முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
முதல்வர், சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை–3.
கிளை மேலாளர், இந்தியன் வங்கி, சென்னை–104.
மாநில கணக்காயர், சென்னை– 18.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
<u>நகல்</u>
நிதி (சுகாதாரம் II) துறை, சென்னை–9.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறைஅமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொதுப்பணித் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–9
உதிரி / இரு.கோ.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு. சந்திரசேகரன்
பிரிவு அலுவலர்
23/4/15